**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED BLACK GRANITE QUARRY OF M/S TAMIL NADU MINERALS LIMITED AT S.F.NO.896 OVER AN EXTENT OF 17.50.0 HA IN AJJANAHALLI VILLAGE, PENNAGARAM TALUK, DHARMAPURI DISTRICT ON 08.04.2025 AT 11.00 A.M., IN M/S. R.N.MAHAL (RAMANAGAMMAL), NEAR VASANTHAM THEATRE, ERIYUR VILLAGE, PENNAGARAM TALUK, DHARMAPURI DISTRICT.**

**PRESIDING OFFICERS:**

| | | |
|---|---|---|
| 1. Tmt.R.Gayathri | : | Revenue Divisional Officer,<br>Dharmapuri. |
| 2. Thiru.K.Udayakumar | : | District Environmental Engineer,<br>TamilNadu Pollution Control Board,<br>Dharmapuri. |

List of Project representatives and public participated is enclosed

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri:**

At the outset, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri welcomed the Revenue Divisional Officer, Dharmapuri, the Project Proponents, the Consultant and the Public who have attended the Public Hearing conducted for obtaining Environmental Clearance for the above said proposed project of the unit of M/s. Tamil Nadu Minerals Limited at S.F.No.896 over an extent of 17.50.0 ha in Ajjanahalli Village, Pennagaram Taluk, Dharmapuri District.

The unit has submitted its application before State Level Environmental Impact Assessment Authority (SEIAA) and obtained Terms of Reference (ToR). It was instructed to conduct Public Hearing and submit the proceedings of the same.

Based on the above, public notice has been published in Daily Newspaper Dinakaran (Tamil) and The New Indian Express (English) on 26.02.2025. The Executive Summary and Draft EIA report of the above said projects are kept in the Government Offices premises for public reference

and Pamphlets were issued to the public regarding the Public Hearing.

Presentation will be given by the Project Proponent after that the public are requested to furnish their views / remarks regarding this project, by mentioning their name and village. The public can also furnish their views as written representation. The recorded video along with written representations will be submitted to the Board and further submitted to State Level Environmental Impact Assessment Authority for further necessary action. The Consultant is requested to explain the project.

**Technical Presentation by the Project Proponent Thiru.E.Ganesan, Deputy Manager, Tamil Nadu Minerals Limited:**

The Project Proponent has made a Technical Power Point Presentation briefing the project of M/s. Tamil Nadu Minerals Limited at S.F.No.896 over an extent of 17.50.0 ha in Ajjanahalli Village, Pennagaram Taluk, Dharmapuri District.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri:**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri has requested the public to furnish their views / remarks regarding this project by mentioning their name and their village.

**1.Thiru.C.V.Maathu, Chinnavaththalapuram, Ajjanalli Panchayat.**

He welcomed the officials who has come to attend this meeting. I extend my initial greetings, noting that this project has been progressing excellently for a long time. My own Panchayat has many numbers of black granite quarries and at the same time, some quarries have been closed due to no work.

That quarries also opened and maintaining a good reputation. During the M.G.R. period, we met along with members of the legislative assembly regarding more quarries operating in Dharmapuri District. Thiru P.K.

Muthusamy and Thiru.Appunugounder were met Thiru.Gopal IAS at secretariat and addressed the same. He mentioned that he would send two ministers to inaugurate the quarry. Similarly, he sent two Hon'ble ministers, Thiru K.K. Krishnasamy and Thiru.Kuzhandhaivelu, belonging to All India Dravida Munetra Kazhagam, for inauguration, resulting in many job opportunities for people. Similarly in Sunchalnatham and other villages there are granite deposits. We are currently requesting that all of this should be taken into government and to provide employment opportunities to the public and also we welcomed this project.

**2.Thiru.D.A. Mani, Kodihalli Panchayat, Former Chairman, Former Councillor**

He welcomed the officials, public representatives and public who has come to attend this public hearing meeting. There are 35 workers are already being worked in this quarries. If the projects situated in this area, it will be benefitted to 50 workers employed in various activities like vehicle operation.

Earlier, many workers were went to Karnataka, Andhra Pradesh, Kerala, Maharashtra, and Madhya Pradesh from here. As far as we know, quarrying operation were commenced only in Ajjanahalli village. As a result, many have gone abroad. Some people involved quarrying operation in Andhra Pradesh most of the workers were learned quarrying business from here but no one from Karnataka.

As a result, many people in our village will benefit. The royalty amount of Rs.4000/- will be credited to the local panchayat. Similarly Rs.15 Lakhs was given to Eriyur High school for construction of compound wall, water facility. If quarrying activity was carried out for 100m we will be benefitted with royalty amount of Rs.4.0 Lakhs which will be helpful to local panchayat for schools and water supply. I thank you for getting opportunity to speak in this public hearing meeting. Thank you.

**3. Thiru. A. Palanisamy, former Panchayat Union Chairman, Eriyur**

He welcomed the officials, public representatives and public who has come to attend this public hearing meeting. They reported that school development and drinking water facility will be provided for public. However, an important issue is narrow road in this area. Heavy vehicles are frequently passing through so we kindly request you to consider widening of these narrow roads. We humbly request you to provide employment opportunities for the people in this area. We welcomed this project. Thank you.

**4. Thiru.Ra.sa. Ulaganathan, SanthaiPettai Village, Ajjanalli Panchayat**

My respectful greetings to all including the District Environmental Engineer and the Revenue Divisional Officer. Previously, there is a road on south of this quarry that is used by the public which connects two villages. We had previously visited this road and discussed with the TAMIN. This road reduces the distance for transporting stones by 3 kilometers. It directly leads to the main road. We request that this road be opened for public use. Furthermore, we request that employment opportunities be given to the local workers. Thank you.

**5. Thiru.Anandan, Pathalalli, Naam Tamilar Katchi Pennaagaram**

**District Secretary**

Black granite is rarely available in the world, especially found in the Dharmapuri and Krishnagiri Districts. The government provides funding to protect a species that is becoming endangered. Laws have been enacted to safeguard it. Rarely available granite is not available for our usage; for example, we excavate 4truckloads of soil from lake for construction of buildings. If unknown person informed the police or revenue department, they will seize the vehicle. This is the current situation, our resources are going to foreign countries, we don't have any benefit as far as I'm concerned. They reported that funds have been allotted to the district for development of local panchayat. We need to first compile a list of what livelihoods exist in

our local area. There is a mandatory to protect them. Now the government is saying that they will give all of this. I am a member of this party, and I have been given an ID card.

The District Environmental Engineer has also put on his ID card. How many government employees are there? A government has also issued order. Even if ID cards and name badges are provided, no one wear ID card, so it is difficult to identify between the general public and government employees. It is the situation here. What impact will this granite quarry have on the people? You are saying that the chemicals used for the process without emanating noise. If that rock is cutting without any noise, will that chemical really have no impact? It is possible to emanating smoke, mixing with the air, Mixing with the soil, and with water, when it enters the earth, it will definitely affect the livelihoods here. Now they say they will allow 30 meters, but there is no guarantee that they will actually do 30 meters.

The Tamil Nadu government has yet to conduct elections for local bodies as per the Tamil Nadu Panchayat Raj Act. Similarly, toll plazas on highways must be stopped immediately once a validity of the period was expired.

Both the central and state governments have not taken any action in this regard. Here, all the people are unaware. Certainly, the quarry will definitely affect the livelihoods and property of the people here. The public has come together to express that they do not want this project, and around 16 or 17 people in the surrounding areas have signed in one petition. We have one request letter and also we hope that you will receive it. We Naam Tamizhar katchi and the Environment Wing opposed the project and registered. Thank you.

**6. Thiru. Sivakumar, Naam Tamilar Party, Ramakondanalli**

My name is Sivakumar, and I have been a candidate of Naam Tamilar Party since 2016. I know all the details about this area. I am from Ramakondanalli village. We have come to express our opinions to you.

However, They refuse to let us share our views. You are conducting public hearing meetings, but there are only about 20 to 30 officials present. No local people from that area.

They said that no noise will be generated while operating the machineries. If you open the window you will see how worst the quarries are being operated. They are lying. To clarify the public opinions are needed from those living near the quarry. No one here from around the quarry. There are 10 members from the PMK party and 5 from the Naam Tamilar Party present here. If the consultation is being continued we protest against the proposed project in presence of Thiru.seeman. We stated that we will not allow this quarry.

Furthermore, the quarry located at number 893, handed over to the government. They said that they have implemented whatever the government planned. Yesterday, we went to that site and observed black stones in the site. No plants and vegetation were maintained.

Now, quarry situated in SF.No.896, covered with green vegetation if your destroying the vegetation we don't want that project. If you act against this, our brother has expressed that he is ready to come to the field to protest. Thank you for the opportunity.

**7. Thiru. Ayyappan, Neruppur**

There are three quarries are operating in Eriyur Panchayat. Dharmapuri District is already a very drought-prone area. They are planning to remove the green trees where the stone quarries are located. While removing stones, they destroying the trees. They are planning to plant 2200 trees. However, it takes at least 3 years for those 2,200 trees to grow. Not only that, but it is unlikely that all 2,200 trees will alive. They are saying that at least 1,700 trees will definitely grow, but there is doubt as to whether they will protect and nurture those 1,700 trees.

They are stating that the local people are being benefitted from this, but they mentioned that only 30 workers are engaged. These 30 workers will go out and work, while the others will stay here? Only these 30 people are supposed to benefit. The extraction of mineral resources is impacting the environment. Hence we oppose it.

**8.Thiru. Gokulraj, Ajjanalli Panchayat, Moongil Maduvu**

I completely oppose the establishment of this quarry. There is no greenery in any locality. If we need to grow a single plant or mountain, it will take many years. Who is granting permission to extract from this quarry and everyone in the Ajjanahalli Panchayat oppose it.

No one is supporting this, is that clear? We have one request to the authorities: this must be completely stopped, and we will resist it. If anyone dares to challenge this, we are ready to oppose it. Thank you.

**9.Thiru. Pandian**

We have been involved in granite work since our grandfather's period. Similarly, we need this buisness. If this business comes we will meet out our daily livelihood. We have travelled many places like Madurai, Kerala, Andhra Pradesh, Odisha and Madhya Pradesh. We have no other work. We have travelled from village to village for this work. We need this quarry. We are always ready to work.

**10. Thiru. Thamarai Selvan, Periyavaththalapuram**

There is no proper invitation for the villagers around where this quarry is establishing. Without an invitation, there is no way to know. My land is next to that quarry. The villagers from Periyavaththalapuram, Chinna Vaththalapuram, Chandappatti, and Kottathundu Kaadu have not received proper information. Furthermore, if there had been a public meeting held in Ajjanahalli Panchayat about this quarry, it would have been easier for everyone to come and go. Now, if I rush and start at 10 AM, I will

only learn about it at 11 AM and have to rush over. I am a landowner near that quarry; I own a patta land there.

The government is undertaking this quarry operation, and while it's good that the government is giving it to a private party, we have no road access around that quarry. There's no way to carry out agriculture there. Therefore, it would be good to establish pathways before starting, as we currently have no routes. We have no access for farming or bringing materials from the forest. The land around the quarry is just government land.

After addressing the basic needs of the people, if the quarry operation does not affect them, there will be no objection. The villagers surrounding the area lack proper information. The residents near the quarry should be aware of the survey number in their vicinity. It would have been good if there had been a public meeting in the village to gather opinions.

Currently, the affected people are not informed, and as we said this, we are outside. I am rushing over. You should consider how many people live around here. In this case, no one from Periyavaththalapuram, Chinna Vaththalapuram, or Chandai Pettai villages is present. There are a few elders and C.V. Muthu, who has come here, but the affected people don't have any information. Only if they are informed can they express their opinions. We have no access roads; if the quarry starts, there will be no transportation route, and there will be no way to reach the forest or the farmland. You can take steps as you want after arranging the pathways for us. We won't object to that. The paths to access our farmland lead to quarry number 896, my numbers are 734/4C1, 4C2, and 734/B where we reside. We have farmland and a house there, and all the necessary facilities for living will not be accessible if the quarries come. There are no paths for us now; you should arrange transportation and conduct the quarry operations. However, a public meeting needs to be conducted properly otherwise, proper information will not reach the villagers. Therefore, I request that to conduct

public hearing in Periyavaththalapuram, Chinna Vaththalapuram, Chandai Pettai, and Kottathundu.

If action is taken properly after gathering the people's opinions, that would be appreciated. I came here suddenly because I received information unexpectedly. Such information should be made available to the village people. If you had conveyed it to the villagers surrounding 896, that would have been better. After providing proper pathways, you should conduct the quarry without affecting their farmland. Yet, I again insist that the public meeting must be conducted in our village. Not everyone in our village is aware of this situation. There may be people who cannot reach this place, and there are differently-abled individuals among them; how will they arrive? I have indeed come here in a hurry. If you gather the opinions of all the people, that would be good for those living in the agricultural land surrounding the village. Thank you.

**11. Thiru. Rajendran, Periyavaththalapuram**

As Thiru.Thamarai Selvan mentioned, there is a problem with the road around that quarry. This mining company has put up a fence, and if permission is granted to leave a path through it, that route will be convenient for the areas of Chandapettai, Periyavaththalapuram, and Chinna Vaththalapuram. I kindly request you to address this issue. If you could arrange for this road to be provided, I humbly ask that you also consider what indirect employment opportunities can be given to the people of that village. Thank you.

**12. Thiru. Mani**

He welcomed the officials, public representatives and public who has come to attend this public hearing meeting. The farmers surrounding this quarry located at SF.No.896 are the one present inside. The representatives Thiru.Seeman should not speak. This gathering consists of all our Panchayat farmers, this is our Panchayat.

**Revenue Divisional Officer, Dharmapuri**

Please do not mention party matters. Talk about the quarry only. Please express your opinion on this project only.

**Thiru. Mani,**

From our village, Chinnavaththalapuram, Periyavaththalapuram, Chandabettai, and Kottathundu Forest, all the people are going to Andhra, Karnataka, and Kerala for labour work. If quarry work starts there, 100 workers will get jobs. We have not expressed any opposition to this. We humbly request you to complete this properly and thank you for giving us the opportunity to speak.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri**

On behalf of the Tamil Nadu Pollution Control Board, I would like to express my gratitude to all those who have come to the public hearing meeting.

Additionally, the attendance register of participants in the public hearing, a short clip of audio and video recordings (Pendrive), the petition received and photographs are attached herewith.

25/4/25

**District Environmental Engineer,**
**TamilNadu Pollution Control Board,**
**Dharmapuri**

25/4/25

**Revenue Divisional Officer**
**Dharmapuri**

**தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், அஜ்ஜனஅள்ளி கிராமத்தில் புல எண் : 896–ல் 17.50.0 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள திரு/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம் லிமிடெட் கருப்பு கிரானைட் குவாரிக்கு 08.04.2025 அன்று முற்பகல் 11.00 மணியளவில் திரு/ள் R.N மஹால் (இராமநாகம்மாள்) வசந்தம் தியேட்டர் அருகில், ஏரியூர் கிராமம், பென்னாகரம் வட்டம், தருமபுரி மாவட்டம் தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விவரங்கள் :**

முன்னிலை :

| | | |
|---|---|---|
| திருமதி. ஆர். காயத்ரி | : | வருவாய் கோட்டாட்சியர்<br>தருமபுரி. |
| திரு. கு.உதயகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>தருமபுரி. |

கலந்து கொண்ட திட்ட பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தருமபுரி.**

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், அஜ்ஜனஅள்ளி கிராமத்தில் அமையவுள்ள திரு/ள்.தமிழ்நாடு கனிம நிறுவனம் லிமிடெட்டின் உத்தேசிக்கப்பட்ட கருப்பு கிரானைட் குவாரி சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கான பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள வருவாய் கோட்டாட்சியர், தருமபுரி அவர்களையும், நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் திட்ட ஆலோசகர் அவர்களையும், இக்கருத்துக் கேட்புக்கு வருகை புரிந்துள்ள பொதுமக்கள் மற்றும் பத்திரிக்கையாளர்களையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்கிறேன்.

மேற்கண்ட, நிறுவனத்தின் உத்தேசிக்கப்பட்ட கருப்பு கிரானைட் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் விண்ணப்பித்ததன் அடிப்படையில், Terms of reference (ToR) –ஐ வழங்கி, பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை நடத்தி, கூட்ட நடவடிக்கையை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மேற்கண்ட உத்தேசிக்கப்பட்ட கருப்பு கிரானைட் குவாரி கருத்து கேட்பு கூட்டம் நடைபெறுவது தொடர்பாக 26.02.2025 தேதியிட்ட தமிழ் நாளிதழ் தினகரன் மற்றும் ஆங்கில நாளிதழ் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டது. அதனை தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் மற்றும் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறவிருக்கும் கிராமத்தின் தொடர்புடைய அரசு அலுவலகங்களுக்கு நிறுவனத்தின் EIA report மற்றும் executive summary ஆகியவை அனுப்பி வைக்கப்பட்டு பொது மக்கள் காட்சிக்கு வைக்கப்பட்டது. மேலும் துண்டு பிரசுரங்கள் வாயிலாக பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் குறித்து பிரசுரிக்கப்பட்டுள்ளது,

இவ்வரவேற்புரையினை தொடர்ந்து நிறுவனத்தை சார்ந்த அதிகாரிகள் நிறுவனத்தின் திட்டச் சுருக்கத்தினை விளக்கி கூறுவார்கள். அவ்விளக்கத்தினை தொடர்ந்து பொதுமக்கள் ஒவ்வொருவராக தங்களது பெயர் மற்றும் ஊரின் பெயரை குறிப்பிட்டு இத்திட்டம் குறித்த தங்களது கருத்துக்களை கூறலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பொது மக்கள் தங்களது கருத்துக்களை எழுத்து மூலம் மனுவாகவும் கொடுக்கலாம். அவ்வாறு பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களும், கருத்துக்கேட்புக் கூட்ட நடவடிக்கைகள் அனைத்தும் ஒலி மற்றும் ஒளி வடிவில் பதிவு செய்யப்பட்டு, பொது மக்களின் கருத்துக்கள் அடங்கிய மனுக்கள் இணைக்கப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி

வைக்கப்படும். அதனை பரிசீலனை செய்து சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து முடிவு செய்யப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்பொழுது நிறுவனத்தின் திட்ட ஆலோசகர் அவர்கள் அமையவிருக்கும் உத்தேசிக்கப்பட்ட கருப்பு கிரானைட் குவாரியின் திட்ட சுருக்கத்தினை விளக்கி கூறுவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திட்ட ஆலோசகர்**

இத்திட்டம் குறித்து விளக்கங்களை நிழற்படம் (Presentation) மூலம் திட்ட ஆலோசகர் அவர்கள் விவரித்தார்.

அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தருமபுரி.**

இத்திட்டத்தினை பற்றி கருத்து கூற விரும்பும் பொதுமக்கள் தங்களுடைய ஊர், பெயர் தெளிவாக தெரிவித்து விட்டு சுருக்கமாக பேசவும்.

**1.திரு.சி.வி.மாது, சின்னவத்தலாபுரம், அஜ்ஜனஅள்ளி ஊராட்சி**

இந்த குவாரி இருக்கின்ற சொந்த ஊர், அதே வேலையில் கருத்து கூட்டத்திற்கு வருகை தந்துள்ள நமது மாவட்டத்தினுடைய கோட்டாட்சியர் அவர்களே, இந்த சுற்றுச்சூழல் உடைய அதிகாரி பெருமக்களே, இந்த ஒன்றியத்தின் அஜ்ஜனஅள்ளி ஊராட்சியின் கிராம அதிகாரி பெருமக்களே, வருவாய் ஆய்வாளர் அவர்களே, மற்றும் இங்கு வந்திருக்கிற அரசு துறை சார்ந்த கனிமவளத்துறை, அரசு துறை சார்ந்த அதிகாரி பெருமக்களே, அத்தனை பேர்களுக்கும் முன்னாள் சேர்மேன், ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் அனைவரும் வந்திருக்கின்றோம். அதே நேரத்தில் முதற்கண் வணக்கத்தை தெரிவித்து கொண்டு இந்த திட்டம் நீண்ட நாளாக சிறப்பாக நடந்து கொண்டிருக்கும். அது என்னுடைய சொந்த ஊராட்சி, அந்த ஊராட்சியில் நிறைய கருப்பு கல் கிரானைட் கற்கள் இருக்கிறது.

சில நேரத்தில் குவாரியில் வேலை குறைந்ததால் சில குவாரிகள் எல்லாம் மூடி வைத்திருக்கிறார்கள். அந்த குவாரியும் திறந்து இதையும் சிறப்பாக செய்ய வேண்டும் என கேட்டு கொண்டு நல்ல துறையாக இருக்க வேண்டும். நான் எம்.ஜி.ஆர் காலத்தில் தருமபுரி மாவட்டத்தில் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து சென்று எம்.ஜி.ஆர் அவர்களிடம் கேட்டோம். இந்த மாதிரி கனிம குவாரி இருக்கின்றது, எங்களது மாவட்டத்தில், எங்க ஊராட்சியில் அதிகமாக இருக்கின்றது. தருமபுரி மாவட்டத்தில் எப்படியாவது இந்த கனிம துறையை எங்களுக்கு செய்து தருமாறு சொல்லி பி.கே.முத்துசாமி, அப்புனுகவுண்டர், எல்லாரும் சென்று செய்து தருமாறு கேட்டதனால அவர் தலைமை செயலகம் அனுப்பினார். கோபால் என்கிற ஐ.ஏ.எஸ் ஆபிசர் தான் முதன் முதலில் போட்டுடிருந்தாங்க, அவரிடம் சென்று கேட்டோம். அய்யா என்ன சொல்லுறாறோ அதை செஞ்சிடலாம்னு சொன்னார்.

அங்கேயே இரண்டு அமைச்சர்களை அனுப்புறேன் உங்க ஊரிலே துவக்க விழா பண்ணுங்க அப்படின்னு சொன்னாங்க. அதே மாதிரி என்னுடைய சொந்த ஊரில் இரண்டு அமைச்சர்கள் கே.கே.கிருஷ்ணசாமி, குழந்தைவேலு இரண்டு அமைச்சர்கள் அனுப்பி வைத்தார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தில் இருந்து இரண்டு அமைச்சர்கள் வந்து கிரானைட் குவாரியை துவக்கி வைத்து சிறப்பாக நடத்தி நிறைய மக்களுக்கு வேலை வாய்ப்புகள் வந்தது. அதேபோல் எங்களுடைய ஊராட்சி மட்டும் இல்லை. சுஞ்சல்நத்தம் மற்ற கிராமங்களிலும் கிரானைட் இருக்கிறது. எல்லாமே அரசு துறையில் எடுத்து பொதுமக்களுக்கு மறைமுகமாக வேலைவாய்பை வழுங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு சிறப்பாக நாங்கள் எல்லோரும் வரவேற்கின்றோம். எங்களுடைய சார்பில் வரவேற்கின்றோம் என கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன் வணக்கம்.

2.திரு.டி.ஏ.மணி, கோடி அள்ளி ஊராட்சி, முன்னாள் தலைவர், முன்னாள் கவுன்சிலர்

இந்த குவாரி கூட்டத்திற்கு வருகை தந்துள்ள வருவாய் கோட்டாட்சியர் அவர்களே, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களே மற்றும் இங்கு வந்திருக்கின்ற தமிழ்நாடு கனிம நிறுவனத்தினுடைய மேனேஜர் அவர்களே மற்றும் கனிம நிறுவனத்தின் அதிகாரிகளே வருகை தந்திருக்கின்ற தொலைக்காட்சி நிருபர்களே மற்றும் என்னோடு வருகை தந்துள்ள உள்ளாட்சி பிரதிநிதிகளே முன்னாள் சேர்மேன் சி.வி.மாது அவர்களே, முன்னாள் சேர்மேன் பழனிசாமி அவர்களே, ஒன்றிய கவுன்சிலர்களே, ஒன்றிய செயலாளர் ராஜா அவர்களே மற்றும் இங்கு பெரும்திரளாக கருத்து கேட்க வந்துள்ள அனைத்து பொதுமக்களையும் வருக வருக என்று வரவேற்கிறேன்.

இங்கே கருத்து கேட்பு கூட்டத்திலே இங்கே அந்த குவாரி ஆரம்பித்தால் இங்கே கனிம நிறுவனத்தின் தொழிலாளர்கள் இதே ஊரை சேர்ந்தவர்கள் 35 பேர் இங்கேயே இருக்கின்றார்கள். அவர்களுக்கு எல்லாம் நல்ல வசதியாக இருக்கும். இங்கிருந்து அவர்கள் எல்லாம் ரொம்ப தூரம் சிவகங்கை அந்த மாதிரி எல்லாம் போட்டுறாங்க. அதனால அவங்களுக்கு இந்த குவாரி ஆரம்பிச்சா ஊர் பக்கத்திலேயே வேலை கிடைக்கும் அதோடு மத்தவங்களுக்கும் மறைமுகமாக 50 பேருக்கு வேலை கிடைக்கும். பொக்கிலின் ஆப்ரேட்டர் மற்றும் ஜாக்கி ஒட்டுபவர்கள், கல்லு டிரசிங் பண்ணுறவங்க, இந்த மாதிரி 50 பேருக்கு மேல் வேலை கிடைக்கும். இதனால நிறைய பேர் சார் சொன்னது போல கர்நாடகா, ஆந்திரா, கேரளா, மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் எல்லாம் இங்கிருந்து போறாங்க. ஆனால் முதன் முதலில் இந்தியாவிலேயே கல்லு வேலை ஆரம்பித்தது அஜ்ஜனஅள்ளி ஊராட்சியில் தான். எங்களுக்கு தெரிந்த வரைக்கும் அதுதான் அதுக்கு முன்னாடி ஆரம்பிச்சாங்களானு எங்களுக்கு தெரியல. இங்கிருந்து வெளிநாட்டிற்கு எல்லாம் போயிருக்காங்க. கல்லு உடைக்கிறதுக்கு, பொக்கிலின் ஓட்டுவதற்கு, கிரேன் ஓட்டுவதற்கு இப்ப எங்க ஊரிலிருந்து சொந்த காரபையன் எங்க அண்ணன் வீட்டு பையன் போயிருக்கான்.

வெளிநாட்டுல போயி அந்த பெரிய கிரேன் 100 டன் தூக்க கூடிய கிரேன் ஓட்டி கொண்டிருக்கிறான். இங்க மதுரையில் தான் ஓட்டிட்டு இருந்தான். அவன் வெளிநாட்டுல போயி 100 டன் தூக்க கூடிய கிரேன் ஆப்ரேட்டராக இங்கிருந்து போயிருக்கான். நம்ம ஏரியாவிலிருந்து இருந்து தான் எல்லாம் ஊருக்கும் போய் இந்த கல்லு தொழில் கற்று கொண்டார்கள். ஆந்திராவில் கூட கொஞ்சம் பேர் கற்று கொண்டார்கள், கர்நாடகாவில் யாரும் இல்லை.

அதனால் நம்ம ஊருல நிறைய பேருக்கு கிடைக்கும். அது இல்லாம இங்க வந்து ராயல்டி கட்டுறது 4000 ரூபாய் நம்ம பஞ்சாயத்து வந்திடும். ராயல்டி கட்டுற பணம் கிராம பஞ்சாயத்துக்கு வரும். அது போல் இப்ப இந்த குவாரி ஆரம்பிக்கும் போது கூட ஏரியூர் பள்ளிக்கு 15 இலட்சம் கொடுத்தார்கள். கனிம நிறுவனத்தில் இருந்து சுற்றுச்சுவருக்கும், குடிநீருக்கும் ஏரியூர் மேல்நிலை பள்ளிக்கு 15 இலட்சம் கனிம நிறுவனத்தில் இருந்து கொடுத்தார்கள். அது போல நிறைய உதவிகள் செய்றாங்க. இப்ப கூட ரோடு போடுறதுக்கு விடவில்லை. இங்கிருந்த பொதுமக்கள், சேர்மேன் எல்லாம் வந்து கேட்டு, அப்ப துணை மேலாளாராக இருந்துவர் இப்ப மேலாளர் பதவி உயர்வு அடைந்துள்ளார் சரி.

பொதுமக்களுக்காக தான் கனிம நிறுவனத்தில் இருந்து ரோடு எல்லாம் விட்டாங்க. அதனால் இது செய்யறதுனால் ஊரு பொதுமக்களுக்கும் இங்கிருந்து வெளியூர் செல்கின்ற வேலைகாரர் எங்க மாதிரி நாங்ககெல்லாம் கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா வரைக்கும் போய் வேலை செஞ்சிருக்கோம். அதனால் இங்க விட்டா ஊர் பொதுமக்களுக்கும் அந்த ஊருக்கும், அதுல வந்து கிட்ட தட்ட 100 மீ எடுத்தா ஏற குறைய நான்கு இலட்சம் ரூபாய் வந்து ராயல்டி கட்டுறாங்க. அந்த நான்கு இலட்சம் ரூபாய் மறுபடியும் திரும்பி நம்ம பஞ்சாயத்துக்கே வந்திடுது. அந்த பஞ்சாயத்துக்கு வந்த நாம எது வேணும்னாலும் செய்யலாம் குடிநீர், பள்ளிகூடம் அந்த மாதிரி வேண்டியது எல்லாம் செய்யலாம்.

அதனால் இந்த விழாவினை மிக சிறப்பாக நடத்திய சென்னையில் இருந்து வந்திருக்க கூடிய கனிம நிறுவனத்தின் மேலாளர் அவர் எல்லாம் எடுத்து சொன்னார். கணேசன் அவர்களும் மிக சிறப்பாக எடுத்து சொன்னார். அது போல் கிருஷ்ணகிரி கோட்ட மேலாளர் அவர்களும் சொல்லுவார்கள். அதனால மிக சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கின்ற இந்த சிறப்பு வாய்ந்த கூட்டத்திற்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன் நன்றி வணக்கம்.

3. **திரு.ஏ.பழனிசாமி, முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு பெருந்தலைவர், ஏரியூர்**

இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக வந்திருக்கும்; மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அம்மா அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அய்யா அவர்களுக்கும் மற்றும் பென்னாகரம் வட்டாட்சியர் அவர்களுக்கும், கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கும் மற்றும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு பெருந்தலைவர் சி.வி.மாது அய்யா அவர்களுக்கும், முன்னாள் கோடிஅள்ளி ஊராட்சி தலைவர் டி.ஏ.மணி அய்யா அவர்களுக்கும் மற்றும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் அனைத்து கட்சி நண்பர்களுக்கும், ஊர் பொதுமக்களுக்கும் அனைவருக்கும் இனிமையான காலை வணக்கத்தை தெரிவித்து கொள்கிறேன்.

அதாவது பள்ளிக்கு வசதி செய்து தருகிறோம், பொதுமக்களுக்கு குடிநீர் வசதி செய்து தருகிறோம் என்று கூறினீர்கள். ஆனால் முக்கியமான ஒன்று சாலை வசதி. இப்பகுதியில் சாலை குறுகலாக இருக்கிறது. அதாவது கிரானைட்னா கனரக வாகனம் தான் அதிகமாக வந்து போகும். அதனால் இந்த குறுகலான சாலையை சற்று விரிவாக்கம் செய்து தருமாறு உங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க உங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். இதை நாங்கள் வரவேற்கின்றோம் நன்றி வணக்கம்.

4. **திரு.ரா.சா.உலகநாதன், சந்தைப்பேட்டை கிராமம், அஜ்ஜனஅள்ளி ஊராட்சி**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், கோட்டாட்சியர் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை தெரிவித்து கொள்கின்றேன். முதலில் இந்த குவாரியை சுற்றி குவாரிக்கு தெற்கு புறமாக பொதுமக்கள் பயன்படுத்த கூடிய சாலை ஒன்று இருக்கிறது. அந்த சாலை இரண்டு ஊருக்கு இணைப்பு சாலையாக இருக்கிறது.

அந்த சாலையை இந்த டாமின் ஏற்கனவே ஒருமுறை போய் சொல்லிட்டு வந்தோம். அந்த லோடு கல்லு எடுத்து போறதுக்கு 3 கிலோ மீட்டர் குறையும். நேரடியாக மெயின் ரோடுக்கு போற மாதிரி அந்த ரோடு வருது. அந்த சாலையை மக்கள் பயன்பாட்டிற்கு விட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். மேலும் இங்கு இருக்கிற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்கு முன்னுரிமை கொடுக்கனும் என்று கேட்டு கொள்கிறோம் நன்றி வணக்கம்.

5. **திரு.ஆனந்தன், பத்தலஅள்ளி, நாம் தமிழர் கட்சி பென்னாகரம், மண்டல செயலாளர்**

உலகத்திலேயே இந்த கருப்பு கிரானைட் அரிதாக குறிப்பாக தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கிடைக்க கூடியதாக இருக்கின்றது. நமக்கு ஒரு அழிந்து வருகிற உயிரினத்தை பாதுகாப்பதற்கு நிதியை அரசாங்கம் கொடுக்கிறது. அதை பாதுகாப்பதற்கான சட்டங்களை இயற்றியது. அரிதாக கிடைக்க கூடிய கிரானைட் வெட்டி எடுத்து நம்முடைய பயன்பாட்டுக்கு வருவதில்லை முதலில் எடுத்துகாட்டுக்கு நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் நம்ம ஊரு ஏரியில வந்து மண் எடுக்கிறோம் களத்துக்கோ, வீடு கட்டுவதற்கோ 4 டிப்பர் மண் எடுப்போம். ஒரு ஜேசிபி இரண்டு டிப்பர் வந்து போகும்.

யாராவது நமக்கு ஆகாதவங்க அந்த வீட்டை சுற்றி இருப்பாங்க. காவல்துறைக்கோ, வருவாய் துறைக்கோ தகவல் சொன்னால் அந்த வண்டியை பறிமுதல் பண்ணிடுவாங்க. இது தான் நிலவரமா இருக்கிறது ஆனா நம்முடைய வளங்கள் மேலை நாடுகளுக்கு போவதால் நமக்கு ஒரு உபயோகம் இல்லை. என்னை பொறுத்த வரைக்கும். நமக்கு மாவட்டத்துக்கு நிதியை கொடுப்பதாக சொல்லி இருக்காங்க. நம்ம ஊராட்சி வலுப்படுத்திக்கலாம்னு, நம்முடைய ஊராட்சியில் என்னென்ன வாழ்வாதாரங்கள் இருக்குதுன்னு நம்மிடம் முதலில் அந்த பட்டியல் இல்லை.

அதை பாதுகாக்க வேண்டிய கட்டாய கடமை இருக்கு இப்ப அரசு இதை எல்லாம் செஞ்சி கொடுக்குதுன்னு சொல்றாங்க. இங்க கட்சியில் நான் ஒரு உறுப்பினரா இருக்கேன். எனக்கு ஒரு அடையாள அட்டை கொடுத்திருக்காங்க. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் வந்து அவருடைய அடையாள அட்டையை போட்டு இருக்காங்க. எத்தனை அரசு ஊழியர் இருக்கிறார்கள். உங்களுக்கென்று அரசாணை கொடுக்கப்பட்டிருக்கு. அடையாள அட்டையும், பெயர் வில்லையும் போடனும்னு என்று. ஆனால் ஒருத்தர் கூட இங்க போடல யாரு பொதுமக்கள், யாரு அரசு ஊழியர் என்று தெரியவில்லை.

இந்த மாதிரியான நிலைமை தான் இங்க இருக்கிறது. நீங்க சொல்லுறீங்க அந்த கெமிக்கல் பயன்படுத்தி சத்தமே இல்லாம வெட்டி எடுத்துருவோம்னு, அந்த பாறையை ரசாயனம் சத்தமே இல்லாம வெட்டி எடுக்குதுன்னா அதனுடைய பாதிப்பு இல்லாமலா இருக்கும். அது வெடிச்சு புகையா ஆவியா போனது காற்றோடு கலக்க போகுது. மண்ணோடு கலக்கிறதும், நீரோடு கலக்கிறதும், இந்த பூமி அடியில்தான் போகிறது. அது இங்க இருக்கிற வாழ்வாதாரத்தை நிச்சயமா பாதிக்கும். இப்ப 30 மீட்டர் சொல்லியிருக்காங்க 30 மீட்டர்ன்னு பண்ணுவாங்கன்னு எந்த உத்தரவாதமும் கொடுக்க முடியாது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தியிருக்க வேண்டும். தமிழ்நாடு அரசு இதுவரை நடத்தவில்லை. அதே மாதிரி நெடுஞ்சாலைகள் இருக்கிற சுங்கசாவடிகள் ஒரு குறிப்பிட்ட காலத்தை கடந்த உடனே அதை நிறுத்தனும். அதை வந்து நிறுத்தாமல் இருக்கு ஒன்றிய அரசும் சரி, மாநில அரசும் சரி அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கல. அப்ப இங்க இருக்கிற மக்கள் எல்லாம் பாமர மக்களாக இருக்குறாங்க. நிச்சயமா அந்த கல்குவாரி வருவதுனால இங்க இருக்கிற மக்களுடைய வாழ்வாதாரத்துக்கும், உடமைக்கும் நிச்சயமா பாதிப்பு இருக்கு. ஆகவே பொதுமக்கள் இதற்கு வந்து வேண்டாம்னு சொல்லிட்டு அந்த சுற்று வட்டாரங்களில் உள்ள 17 பேர் வந்து கையெழுத்து போட்டு கொடுத்திருக்கிறார்கள். நாங்க ஒரு கோரிக்கை மனுவும் வச்சிருக்கோம். அய்யா வந்து பெற்று கொள்வீர்கள் என்று நாங்க நம்புகிறோம். கட்டாயம் இந்த திட்டத்திற்கு வந்து நாம் தமிழர் கட்சி சார்பாகவும், சுற்றுச்சூழல் பாசறை சார்பாகவும் பொதுமக்களும் இதை வேண்டாம்னு வந்து சொல்லியிருக்காங்க. இது எங்களுடைய மறுப்பை நாங்க இங்க அழுத்தம் திருத்தமாக பதிவு செய்கிறோம் நன்றி வணக்கம்.

6. **திரு.சிவகுமார், நாம் தமிழர் கட்சி, இராம கொண்டஅள்ளி**

என்னுடைய பெயர் சிவகுமார், நாம் தமிழர் கட்சி, 2016 ஆம் ஆண்டு வேட்பாளராக இருக்கின்றேன். இந்த ஏரியூர் பற்றி எல்லாம் விபரமும் தெரியும். நான் இராமகொண்டஅள்ளியை சேர்ந்தவன். உங்களிடம் கருத்து சொல்ல தான் நாங்க வந்திருக்கோம். அவங்க கிட்ட கருத்து சொல்ல நாங்க வரல. அப்ப தடுக்கவும் மறுக்கறீர்கள். பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம்னு நடத்துறீங்க ஆனா இதுல 20, 30 பேர் அதிகாரிகள் தான் உட்கார்ந்துட்டு இருக்காங்க. அப்ப பொதுமக்களுக்கு அந்த ஊருல இருந்தோ அந்த பகுதியில் இருந்தோ யாரும் வர வில்லை. ஜாக்கி ஓட்டுனா சத்தம் வராத மாதிரி தண்ணீர், காற்று விட்டு ஓட்டுறதா திட்ட பிரதிநிதி சொல்லுறாரு.

இப்ப ஒண்ணும் இல்ல அந்த ஜன்னலை திறந்து பாருங்க. அந்த குவாரியை, பெண்களுக்கு மொட்டையடித்துட்டு பார்த்தா அழகா தெரியுமா. அந்த அளவுக்கு கேவலமா ஓடுதா இல்லையானு பாருங்க. இந்த மாதிரி பொய் பேசிகிட்டு இவங்க சொல்லுகின்ற கருத்து ஒண்ணு இங்க செய்யற வேலை ஒண்ணா இருக்கு. இந்த மக்களுக்கு தெளிவா சொல்லுனும்னா அந்த குவாரி சுற்றி இருக்கிறவங்கள கருத்து கேட்கணும். அந்த குவாரி சுற்றி இருக்கிறவங்க யாரும் வரல. பாமக கட்சிகாரர் 10 பேர் நாம் தமிழர் கட்சி 5 பேர் வந்திருக்கோம் இவங்கல வைத்து கருத்து கேட்பு நடத்தி அந்த குவாரி திட்டமிட்டு நடைபெற்றால் எங்கள் அண்ணன் சீமானை கொண்டு வந்து இங்க போராட்டம் உறுதியாக நடத்துவோம். அந்த குவாரி செயல்பட விடமாட்டோம் என ஆணித்தரமாக சொல்லுகிறோம்.

அதுமட்டுமில்லாமல் அந்த குவாரி 893ன்னு ஒரு குவாரி செஞ்சி இருக்காங்க அய்யா சொல்லுறாரு அது எல்லாம் அரசிடம் கொடுத்தோம். அது சரியா வரல அரசிடம் கொடுத்தோம். அரசு என்ன திட்டம் சொன்னதோ சரி பண்ணி கொடுத்திட்டோம் சொல்லுறார். நேற்று போய் பார்க்கிறோம் அந்த குவாரியில கல்லு மட்டும் தான் கருப்பா கிடக்குது. இவங்க வைத்த செடி, கொடி ஒண்ணு காட்டுங்க பார்ப்போம். இப்ப 896 செய்யறாங்க பார்த்தீங்களா அந்த குவாரியில் பச்சை பசேல் என்று போர்வை போர்த்திய மாதிரி மரங்கள் எல்லாம் இருக்கிறது.

அதை எல்லாம் எடுத்துட்டு கருப்பு கல்லு வெட்டி எடுத்து தான் மக்களுக்கும் அஜ்ஜனஅள்ளி கிராமத்துக்கும், ஏரியூர் மக்களுக்கும் இந்த ஒன்றியத்துக்கும் செய்வீங்கனா அப்படிபட்ட திட்டமே எங்களுக்கு தேவை இல்லை. அப்படி மீறி செயல்பட்டால் எங்க அண்ணனோட உத்தரவு, நீங்கள் எதிர்த்து நில்லுங்கள் நான் களத்திற்கு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். எனக்கு வாய்ப்;பளித்தற்கு நன்றி வணக்கம்.

7. **திரு.அய்யப்பன், நெருப்பூர்**

இப்ப ஏற்கனவே ஏரியூர் ஒன்றியத்தில் வந்து மூன்று குவாரிகள் இருக்கு. ஏற்கனவே தருமபுரி மாவட்டம் மிக வறட்சியான மாவட்டம். இதில் வந்து கல்குவாரிகள் இருக்கிற பசுமையான மரத்தை எடுத்துட்டு தான் கல்குவாரியை எடுக்க போறாங்க. கல் எடுக்கும் போது மரத்தினை அழிச்சிடுறாங்க. இவங்க 2200 மரம் வைக்கிறேன்னு சொல்லுறாங்க. அந்த 2200 மரமும் வளருவதற்கு குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் ஆகும். மூன்று ஆண்டுகள் ஆவது மட்டுமில்லாமல் கண்டிப்பாக 2200 மரமும் வராது. இவங்க 1700 மரம் கண்டிப்பாக வரும் சொல்லுறாங்க. ஆனா 1700 மரங்களுக்கு இவங்க பாதுகாப்பு செய்து வளர்ப்பார்கள் என்பது ஒரு கேள்வி குறியாக தான் இருக்கிறது.

இப்ப உள்ளுர் மக்கள் பலன் அடைகிறார்கள் சொல்லுறாங்க இதுல வேலை செய்றவங்க 30 பேர் தான் குறிப்பிட்டு இருக்காங்க. இந்த 30 பேர் தான் வெளியில போய் வேலை செய்றாங்க. மற்றவங்க எல்லாம் இங்க தான் இருக்காங்ன்னு இல்ல. இங்க வந்து 30 பேர் தான் பயன் அடையறாங்க. இதுல வந்து கனிம வளங்களை எடுத்து போறதுனால சுற்றுச்சூழல் தான் பாதிக்கப்படுகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறோம்.

8. **திரு.கோகுல்ராஜ், அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, மூங்கில் மடுவு**

இந்த குவாரி அமைக்கிறதுல நான் முழுமையா எதிர்ப்பு தெரிவிக்கிறேன். ஏன் என்றால் பசுமை எந்த ஊரில் பசுமையா இருக்கு சொல்லுங்க. எந்த ஊரிலும் எந்த பசுமையும் இல்லை. ஒரு செடியையோ, ஒரு மலையையோ வளர்க்கணும்னா நிறைய வருடம் தேவைப்படும். அப்பேர்ப்பட்ட ஊருல இருந்துட்டு குவாரி எடுப்பதற்கு யார் அனுமதிக்கிறாங்க. அதே அஜ்ஜனஅள்ளி பஞ்சாயத்துல இருக்கிறவங்க இதுக்கு மறுப்பு தெரிவிக்கறாங்க. யாரும் இதுக்கு ஆதரிக்கவில்லை. அதிகாரிகளுக்கு ஒரே ஒரு கோரிக்கை இது வந்து முழுமையாக தடுக்கணும் நாங்க தடுப்போம். இதை சவாலா நின்று யாரவது பண்ணா அதை எதிர் கொள்ள நாங்க ரெடியா இருக்கிறோம் நன்றி.

9. **திரு.பாண்டியன்**

அன்புள்ள பொதுமக்களே, இது வந்து எங்க தாத்தா காலத்தில் இருந்தே நாங்க வந்து கிரானைட் வேலை தான் செஞ்சிட்டு இருந்தோம். அதே போல எங்களுக்கு வந்து இந்த தொழில் தேவை. இந்த தொழில் இருந்தா தான் அன்றாடம் நாங்கள் கஞ்சி குடிக்க முடியும். எங்கள் அய்யா முன்னாள் சேர்மன் சொன்னது போல நாங்கள் இங்கிருந்து மதுரை, கேரளா, ஆந்திரா, ஒரிசா, மத்தியபிரதேசம் எல்லாம் போயிருக்கோம். இதை விட்டால் எங்களுக்கு எந்த வேலையும் இல்லை. இந்த தொழிலுக்காக நாங்க ஊர் ஊராக சென்றிருக்கிறோம். எங்கள் முன்னாள் சேர்மன் அய்யாவும், எங்கள் சேர்மன் அய்யாவும் எங்களுக்கு இந்த தொழில் யார் வந்தாலும் செய்ய நாங்க ரெடியா தான் இருக்கிறோம் அம்மா /அய்யா வணக்கம் நன்றி.

10. **திரு.தாமரை செல்வன், பெரியவத்தலாபுரம்**

முதன்முதலில் இந்த குவாரி நடக்கிற சுற்றி இருக்கிற கிராம மக்களுக்கு முறையான அழைப்பிதழ் இல்லை. அழைப்பிதழ் இல்லைன்ற தகவல் தெரியவில்லை. நான் அடிச்சி புடிச்சி ஓடு வருகிறேன். அந்த குவாரி இருக்கிற பக்கத்துல என் நிலம் இருக்கு. அதை சுற்றி இருக்கிற பெரிய வத்தலாபுரம், சின்ன வத்தலாபுரம், சந்தப்பட்டி, கொட்டதுண்டு காடு போன்ற கிராம மக்களுக்கு முறையான தகவல் இல்லை. அப்புறம் அஜ்ஜனஅள்ளி பஞ்சாயத்துல இந்த குவாரி இருக்குன்னா அஜ்ஜனஅள்ளி கிராமத்துல கருத்து கேட்பு கூட்டம் நடத்தியிருந்தால் எல்லா மக்களுக்கும் வந்து போவதற்கு சரியா இருந்திருக்கும். இப்ப நான் அடிச்சி புடிச்சி 10 மணிக்கு ஆரம்பித்தால் நான் 11.00 மணிக்கு தகவல் தெரிந்து அடிச்சி புடிச்சி வரவேண்டியதா இருக்கு. நான் அந்த குவாரி இருக்கிற பக்கத்து நிலத்துக்காரன், ஒரு பட்டா நிலத்துக்காரன் இருக்கேன்.

அந்த குவாரி அரசு எடுத்து நடத்துறதுல, அரசு தனியாருக்கு கொடுக்கிறதுல ஆட்சேபணை இல்ல. அந்த குவாரி சுற்றி இருக்கிற எங்களுக்கு தடம் வசதி கிடையாது. ஒரு விவசாயம் பண்ணுவதற்கு வழி இல்லை.

எனவே ஆரம்பிக்கும் பட்சத்தில் வழித்தடங்கள் ஏற்படுத்தி விட்டு குவாரி நடத்துனா நல்லாயிருக்கும். ஏனென்றால் எங்களுக்கு இப்பவே வழித்தடம் இல்லை. விவசாயம் பண்ணுவதற்கோ, காட்டுக்கு ஒரு பொருள் எடுத்து வருவதற்கோ வழித்தடங்கள் இல்லை. சுற்றியும் குவாரி அரசு கரடு புறம்போக்கு நிலங்கள் தான் இருக்கு. மக்களுக்கு தேவையான அடிப்படை தேவைகளை ஏற்படுத்திவிட்டு குவாரி நடத்துங்க மக்களுக்கு பாதிப்பு இல்லைன்னா எந்த ஒரு எதிர்ப்பும் இல்லை. சுற்றி இருக்கிற கிராம மக்களுக்கு முறையான தகவல் இல்லை.

அந்த குவாரி இருக்கிற சுற்றி இருக்கிற சர்வே எண் இருக்கிற மக்களுக்கு தகவல் தெரிஞ்சிருக்கணும். அந்த ஊருல கருத்து கேட்பு கூட்டம் நடத்தியிருந்தா நன்றாக இருக்கும். இப்ப பாதி பேருக்கு தெரியல. இப்ப சொன்ன நாங்க வெளியில இருக்கோம்றாங்க. நான்அடிச்சி புடிச்சி ஓடி வரேன். சுற்றி இருக்கிற மக்கள் எத்தனை பேர் இருக்கிறாங்கனு நீங்களே எண்ணி பார்த்துக்கோங்க. இதில் பெரியவத்தலாபுரம், சின்ன வத்தலாபுரம், சந்தைப்பேட்டை கிராம மக்கள் யாரும் இங்க கிடையாது. ஒரு சில அய்யா, தாத்தா சி.வி.மாது இருக்கிறார். அவர் பக்கத்துல அவர் வந்திருக்கிறாரு பாதிப்பு பேருக்கு தகவல் தெரியல. தெரிஞ்சால் தான் அவங்க கருத்தை அவங்க தெரிவிக்க முடியும். எங்களுக்கு வழித்தடம் இல்லை குவாரி ஆரம்பித்தால் போக்குவரத்து வழி இல்லை, காட்டுக்கு விவசாய நிலத்துக்கு போவதற்கு வழி இல்லை. எங்களுக்கு வழி ஏற்படுத்தி கொடுத்து விட்டு நீங்க என்ன வேணும்னாலும் செய்யலாம், அதற்கு நாங்க எதிர்ப்பு தெரிவிக்கல. எங்க விவசாய நிலத்துக்கு போறதுக்கு குவாரிக்கு 896க்கு கீழ் என் நம்பர் 734/4C1,4C2, 734/B அந்த மாறி சர்வே எண்ணில் நாங்க வசித்து கொண்டிருக்கிறோம்.

எங்க விவசாய நிலம் இருக்கு, ஒரு வீடு இருக்கு அதுமாதிரி அங்க வாழ்வதற்கு உண்டான எல்லாம் வசதிகளும் குவாரிகள் வந்தா வழிப்பாதை கிடையாது. வழி இப்பவும் கிடையாது எங்களுக்கு போக்குவரத்து ஏற்படுத்தி கொடுத்துவிட்டு குவாரி நடத்தி கொள்ளுங்கள். எங்களுக்கு எதுவும் இல்லை.

ஆனா கருத்து கேட்பு கூட்டத்திற்கு முறையான தகவல் வந்து சேரல அதனால் எல்லா மக்களுக்கும் எங்க பஞ்சாயத்துல ஒரு கருத்து கேட்பு கூட்டம் பெரிய வத்தலாபுரம், சின்ன வத்தலாபுரம், சந்தப்பட்டி, கொட்டதுண்டு காடுலையோ ஏற்படுத்தி கொடுத்து அந்த மக்களை கருத்து கேட்டுவிட்டு நீங்க முறையா நடவடிக்கை எடுத்தா நன்றாக இருக்கும்னு நான் கேட்டுக்கிறேன். நான் யயேதிச்சையாக தான் திடீரென தகவல் கிடைத்து தான் நான் வந்தேன். முறையாக அந்த தகவல் கிராம மக்களுக்கு கிடைக்க வேண்டும், 896–ல் உள்ள சர்வே நெம்பரை சுற்றி இருக்கிற கிராம மக்களுக்கு நீங்க சொல்லியிருந்தா இன்னும் நன்றாக இருந்திருக்கும்.

எங்களுக்கு முறையான வழிப்பாதை ஏற்படுத்தி விட்டுவிட்டு சுற்றி இருக்கிற கிராம மக்களுக்கு அவங்க விவசாய நிலங்கள் பாதிக்காமல் வழிப்பாதை ஏற்படுத்திவிட்டு நீங்க குவாரி நடத்தி கொள்ளுங்கள். ஆனால் கருத்து கேட்பு கூட்டம் நான் திரும்பவும் வலியுறுத்தி சொல்வது எங்கள் ஊருல நடத்தணும். எங்க கிராமத்துல எல்லா மக்களுக்கும் தெரியாது.

இந்த இடத்துக்கு வர முடியாத மக்கள் இருப்பாங்க, மாற்று திறனாளி இருப்பாங்க அவங்க எல்லாம் எப்படி வர முடியும். நானே திடீர்ன்னு அவசரமாக தான் வந்தேன். எல்லா மக்களையும் கருத்து கேட்கணும்னா அந்த கிராமத்தை சுற்றி நிலப்பகுதியில் இருக்கிற மக்கள் கிட்ட கருத்து கேட்கிறது நல்லாயிருக்கும் நன்றி.

11. **திரு.ராஜேந்திரன், பெரியவத்தலாபுரம்**

தாமரைசெல்வன் சொன்னது போல அந்த குவாரியை சுற்றி வழி பிரச்சனை இருக்கிறது. இந்த கனிம நிறுவனம் வேலி போட்டு இருக்காங்க அந்த வேலிக்கும் உள்ள அனுமதித்து ஒரு வழி விட்டா அவங்களுக்கு சந்தபேட்டை, பெரிய வத்தலாபுரம், சின்ன வத்தலாபுரம் கிராமத்திற்கு அந்த வழிப்பாதை சௌகரியமாக இருக்கிறது.

அதை தயவு செய்து நீங்க செய்து கொடுக்கணும். செய்து கொடுத்துட்டு இந்த சுரங்கத்தை நீங்க எற்பாடு செய்தால், இந்த மறைமுகமான வேலைவாய்ப்புகள் என்னென்ன இருக்குதோ அந்த கிராமத்து மக்களுக்கு தரும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் நன்றி.

12. **திரு.மணி**

சுற்றுச்சூழல் பொறியாளர்களே, வருவாய் கோட்டாட்சியர் அவர்களே, கனிம நிறுவன மேலாளர் அவர்களே, கிருஷ்ணகிரி கோட்ட மேலாளர் அவர்களே என் பணிவான வணக்கம். இந்த குவாரி 896–ல் சுற்றியுள்ள விவசாயிகள் தான் உள்ளே இருக்கோம். இங்க திட்டமிட்டு, சீமான் அவங்க ஆளுங்களை உள்ளேவிட்டு இங்க வந்து பேச கூடாது. இது எங்க பஞ்சாயத்து விவசாயிகள் அனைவரும் வந்திருக்கிறோம் இது எங்க பஞ்சாயத்து

**வருவாய் கோட்டாட்சியர், தருமபுரி**

அய்யா கட்சி எல்லாம் சொல்ல வேண்டாம் குவாரி பற்றி மட்டும் சொல்லுங்க. அமைதியாக இருங்க எந்த நபர் பற்றி பேசாம குவாரி பற்றிய கருத்தை மட்டும் பதிவு செய்யுங்க.

**திரு.மணி**

எங்க ஊரிலிருந்து சின்னவத்தலாபுரம், பெரிய வத்தலாபுரம், சந்தபேட்டை, கொட்டதுண்டு காடு அனைத்து பொதுமக்களும் ஆந்திரா, கர்நாடகா, கேரளா எல்லா ஊருக்கும் கூலி தொழிலுக்கு போய் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு அங்க குவாரி வேலை ஆரம்பித்தால் 100 தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். இது எங்களுக்கு எந்த ஒரு எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. நல்லபடியா முடித்து கொடுக்கும்படி தாழ்மையுடனும், பணிவுடனும் கேட்டுக் கொள்கிறோம் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி வணக்கம்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தருமபுரி**

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை மனுவாகவும் கொடுத்தால் ஏற்று கொள்ளப்படும். இக்கருத்து கேட்பு கூட்டத்திற்கு வந்திருக்கின்ற பொதுமக்கள் அனைவருக்கும் மற்றும் அனைவருக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக மிக்க நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மேலும் பொதுமக்கள் கருத்து கேட்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகைப் பதிவேடு, ஒலி மற்றும் ஒளிப்பதிவுகளின் குறும்பதிவி (Pendrive), பெறப்பட்ட மனு மற்றும் புகைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**தருமபுரி**

**வருவாய் கோட்டாட்சியர்**
**தருமபுரி**